# பகுத்தறிவு

ஆசிரியர் : [illegible]ண்ணன்.

கழக வார இதழ். ★ ★ ★ விலை அணா ஒன்று.

மலர் 6. | சேலம் 21-9-56 திருவள்ளுவராண்டு 1987. புரட்டாசி 6. | இதழ் 11


**கலைஞன்.**

கைவேலை செய்பவன் வேலைக்காரன்; கையாலும் மூளையாலும் வேலை செய்பவன் வினைஞன்; கை, மூளை, உணர்ச்சி இவைகளை ஒன்றுபடுத்தி வேலை செய்பவன் கலைஞன் என்று பாகுபடுத்தலாம்.

—இரா. நெடுஞ்செழியன்.

# சம்பத் அறிக்கை; சர்க்கார் பதில் எங்கே?

வடநாட்டு ஏகாதிபத்திய ஆட்சியினரால் தென்னாட்டு நலன், தென்னாட்டு வளம் புறக்கணிக்கப்படுவதற்கு எத்தனை, எத்தனையோ ஆதாரங்கள் உண்டு. அவற்றிலே, சேலத்தில் அலுமினியம் தொழிற்சாலை அமைப்பதற்கு, அவர்கள் கவலைப்படாது காலங்கடத்தி வருவதும் ஒன்றாகும்.

வடநாடு நமக்குச் செய்யும் அநீதிகளை மக்கள்மன்றத்திலே வன்மையாக எடுத்துக் கூறி கண்டிப்பதற்கு, தென்னகத்திலே திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான் உள்ளது. அதன் தலைவர்களிலே ஒருவர் தோழர், ஈ. வே. கி. சம்பத்து. தென்னாட்டுக்கு உதவ முன்வரும் வெளிநாட்டார் உதவியைப் பொருட்படுத்தாத அரசினர் போக்கினைப் பாருங்கள். தோழர், சம்பத்து அவர்கள் தமது அறிக்கையிலே கூறுகின்றார்:

சோவியத் பிரதமர் புல்கானினும், கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் குருஷேவும், இந்தியத் துணைக்கண்டத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு இரஷ்யா திரும்பின சில நாட்களுக்கெல்லாம், பின்வரும் உதவி தரும் அறிக்கை வெளிவந்திருக்கிறது; அந்த அறிக்கையை இன்றுவரை இந்தியப் பேரரசு மறுக்கவில்லை.

சேலத்தில் அலுமினியம் தொழிற்சாலையைத் துவங்குவதற்கு சோவியத் அரசாங்கம் தர அறிவித்திருந்த உதவியைதான் ஏற்றுக்கொண்டதா—இல்லையா? ஏற்றுக்கொள்ள மறுத்திருந்தால் அதற்கு நியாயமான சமாதானம் என்ன?—என்பது பற்றி எல்லாம் இந்தியப் பேரரசு, இதுவரை மூச்சுப் பேச்சு இல்லாமல் இருந்து வருகிறது.

தொழில் துறையில் தென்னிந்தியா பின்தங்கிக் கிடக்கிறது என்ற உண்மை, இரஷ்யத் தலைவர்களாலும் நன்கு உணரப்பட்டிருக்கிறது என்பது, அவ்வறிக்கையின் தனிச் சிறப்பாகும்.

இவ்வறிக்கையின் உள்ளடக்கம் குறித்தும், அவ்வறிக்கையில் காணப்படும் இரஷ்ய உதவியை ஏற்கவும்-மறுக்கவும் செய்யாது வாயடைத்து இருந்துவரும் இந்தியப் பேரரசினுடையவும், சென்னை ஆட்சியினுடையவும் நாணயமற்ற—நேர்மையற்ற போக்கை, நான் பற்பல கூட்டங்களில் எடுத்துக் காட்டிக் கண்டித்துள்ளேன்.

நான் பேசிவருவதின் உண்மையைத் தாங்களும் ஆதாரத்துடன் தெரிந்திருக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் பலரும், ஏதோ நானுகக் கற்பனை செய்துகொண்டு அவ்வாறு பேசி வருகிறேன் என்ற சந்தேகத்தில் சிலரும், இரஷ்ய உதவி பற்றிய அறிக்கையைப் பிரசுரிக்கும்படிக் கோரி, எழுதி வருகின்றனர். தனித்தனியாகக் கடிதம்எழுதி உண்மையை எடுத்துக்காட்ட இயலாத அளவில், கோரிக்கைக் கடிதங்கள் என்னிடம் குவிந்து கிடக்கின்றன.

கோரினவர்கள் உண்மை அறியவும், இரண்டிலும் சேராது இருக்கும் பெரும்பான்மையினர் விஷய விளக்கம் பெறவும், 'மெயில்' இதழில் வந்த இரஷ்ய உதவிச் செய்தியை ஆங்கிலத்திலும், தமிழிலும் (தமிழில் மட்டும். ஆ-ர்) இதன்கீழ் தந்திருக்கிறேன். கழகத் தோழர்களும், மற்ற பொதுமக்களும் உண்மையை உணர்ந்து, இந்தியப் பேரா

(8-ம் பக்கம் பார்க்க)

# பெரியார் குரங்கு!

"இளநீரின் அருமையை அரியாத குரங்கு அதைக்கீழே கொட்டுவதுபோல், ராமாயணத்தின் அருமை பெருமைகளைப் புரிந்துகொள்ளாதவர்கள் அதை எரிக்க முற்படுகிறார்கள்."

வினோபாவின் இந்தப் புன்மொழிக்குப் படம்போட்டுக் காட்டுகிறது 16-9-56 "கல்கி" இதழ். நமது கண்கள் சிவக்கின்றன.

ஒரு தென்னைமரம், கீழே மூன்று குரங்குகள் நிற்கின்றன. மரத்தின் மேல் ஒரு குரங்கு—பெரியார்! இளநீரைப்பொத்து, மேலிருந்து நீரைக் கொட்டுகிறாராம்! இது புண்படுத்தும் கேலிச் சித்திரம்!

"கல்கி" எழுதுகிறது என்றால் ராஜாஜி சொல்லுகிறார் என்பதே பொருள். ராஜாஜியோ பெரியாரின் அந்தரங்க நண்பர்; நம்பிக்கைக்கு உரியவர்; என்றாலும் அவர் ராமாயணத்தைப் பாதுகாக்க வேண்டியவர்—ஆரியர். இவரோ அதனை ஒழிக்கவேண்டியவர்-திராவிடர்!

ஒரு ஆரியத் தலைவர், திராவிடத் தலைவரைக் குரங்கு என்கிறாரே; நியாயமா இது? நியாயந்தான் என்கிறார். ராமாயண பக்தர். ஆமாம்; பிறகென்ன? ராமாயணமும் இப்படித்தானே சொல்லுகிறது? அதைத்தானே ராஜாஜியும் சொல்லுகிறார், காமராஜீயும் சொல்லுகிறார்! இந்தப் பிரச்சினையிலே "அவாள்" ஒன்றுதானே! இருந்தாலும் அவாள் இருவருமே பெரியாரின் நண்பர்கள். நாமோ....? நமதுகழகமோ....?

# விந்தை மனிதர்!

"இளந்தமிழன்"

கிணற்றிலே நெடுநேரம் மூழ்கி ஆடியபின் கரையேறினால் உலகமே புகைமண்டலமாகக் காட்சி அளிக்கும். கோளாறு கண்ணிலேதான்—மண்ணிலேயல்ல! பித்தனுக்கு வையமே பித்தர் வாழ்விடமாகத் தோற்றும். நம்மைக் கண்டு சிரிப்பான்—எள்ளி நகையாடுவான்—சிலநேரம் அழவும் செய்வான். பாவம், அந்த ஏழைக்காக நாம் இரக்கப்பட வேண்டுமேயல்லாது, அவன் மீது எரிந்து விழலாகாது. அறுசுவை உண்டி; அதனினும் இனிய மனையாள்; அன்போடு ஊட்டுவாள்—கசக்கிறது என்று காறி உமிழ்வான் கொண்டவன். அவள் அன்பு நெஞ்சமோ வேகும். அவன்தான் என்ன செய்வான்? பாழுங்காய்ச்சல் உண்டியைக் கசக்கும்படிச் செய்கிறது. பசி வேகத்தில் அவனால் அதை உணாமுடிவதில்லை. இப்படிக் கண் சிவப்பால் திகைப்போரும், அறிவுப் பிறழ்ச்சியால் அலைவோரும் காய்ச்சலின் விளைவால் தொல்லைப்படுவோரும் இந்திய நாட்டில் பல்கிக்கொண்டே வருகிறார்கள். சிலர் சிரிக்கிறார்கள்! சிலர் அழுகிறார்கள்! சிலர் இரண்டுங்கெட்டாந்தனமாக அங்கும் இங்கும் ஓடுகிறார்கள். உழைப்புக்கோ ஒன்றுமில்லை-ஓய்வுக்கோ நொடிநேரமும் கிடைப்பதில்லையாம்! விந்தையான மனிதர்கள்!

9-8-56 வியாழக்கிழமை மாலை 7-மணிக்கு இத்தகைய மனிதர் ஒருவரைச் சந்தித்தேன். சென்னையிலே உள்ள திருமயிலையிலே—அதுவும் ரஸிக ரஞ்சனி சபாவிலே அவரைக்காணும் பேறு இந்த ஊனக் கண்களுக்குக் கிட்டியது. நல்ல சிவப்பான மேனி. நரைத்த தலை, தளர்ந்த மேனிதான், என்றாலும் உணர்விலோ, சொல்லிலோ தளர்வில்லை—தட்டுத்தடங்கவில்லை. இவ்வளவு முதியவருக்கா இந்த நிலை நேரவேண்டும்?

நான் குறிப்பிடும் ஆள், பழைய சோஷலிஸ்ட் கட்சித்தலைவராக இருந்த ஜெயப்பிரகாஷ் நாராயணன், பேச இருந்த தலைப்போ நிலக்கொடை இயக்கம். இந்தநாட்டிலே நடப்பது குடியாட்சியல்ல கோனாட்சிதான் என்பதை மெய்ப்பிப்பதற்காகவே நடந்துவரும் இயக்கம் அது என்பது எனக்கு அதைப்பற்றிய கருத்து. இருந்தாலும் அந்தப் பெரியவர் ஏதோ தத்துவ விளக்கம் தருகிறார் என்றார்கள். எனவே வியர்வை சொட்ட அங்குவிரைந்தேன். நான் என்றுமே நுழைவதில்லை என்று கொண்டிருந்த சூளையும் மறந்து, எனது பாதங்களால் அந்த அவையைப் புனிதப் படுத்தினேன். கடைசியிலே அது இப்படிக் கூத்தாக முடியுமென்று நினைக்கவேயில்லை! கலித்தொகையிலே ஒரு அழகான பாட்டு: காதலனை எதிர்நோக்கிக் காத்திருக்கிறாள் ஒரு கட்டிளம் பெண். திணிந்த இருள். அந்நேரத்தில் அங்கு எவன் வருகிறான் தெரியுமா? குட்டத்தால் உடல் முடங்கி, தலை வழுக்கலாகி, நாற்றமெடுத்தும் ஆசை மட்டும் அவியாமல் கொழுந்து விட்டெரியும் ஒரு பார்ப்பனன்! ஜெயப்பிரகாஷ் கூட்டம் முடிந்து திரும்பும்போது ஏனோ இந்தப்பாடல் என் நினைவுக்கு வந்தது.

நிலக்கொடை இயக்கம் பற்றிய அவரது தத்துவார்த்தம் நமக்கு வேண்டாம். அவர் மனக்குழப்பத்தில் குழறிய சொற்களைப் பற்றியதே நமது ஆராய்ச்சி. அவர் பேசிய தலைப்புக்கும் இறுதியில் அவர் கூறிய சில தொடர்களுக்கும் தொடர்பில்லை என்பது பற்றிக் கூட அல்ல என் குற்றச்சாட்டு. ஆரிய திராவிடப் போராட்டம் அர்த்தமற்றது என்ற அவர் கூற்றுபற்றியும் நான் கவலையுறவில்லை. அது அவருடைய கருத்து. அர்த்தம் உண்டா இல்லையா என்பதை அவருக்கு உணர்த்த வேண்டியது அதில் நம்பிக்கை கொண்டோர் செய்யவேண்டிய பணி, முன்னேற்றக் கழகத்தை எள்ளி நகையாடியது, அவர்கள் (முன்னேற்றக் கழகத்தார்)

[7-ம் பக்கம் பார்க்க]

## எதிரொலி

தேர்தலுக்கு நிற்காத இயக்கங்களால் தான் நாட்டுக்கான நன்மை செய்யமுடியும் உண்மையை ஒளிக்காமல் கூற முடியும்.

—"விடுதலை"

அதுவும் ஒரே தலைவரின் கீழ், ஒரே கொடியின் நிழலில், ஒரே பத்திரிகையின் எழுத்தில், வாழுபவரால்தானே முடியும்! இல்லையா?

*　*　*

அணுகுண்டை முதன் முதலில் கண்டு பிடித்தவர் முருகக் கடவுள்

—முத்துராமலிங்கதேவர்.

படுபாவி; துரோகி; சண்டாளன்; நன்றி கெட்டவன்; தன்னை மதியாத மேலைநாட்டானுக்கா அதைச் செய்யும் விதம் கூறினான்?

*　*　*

2000 கோடி ரூபா தரச்சொல்லுகிறேன், அண்ணுதுரை அதற்கான திட்டம் கொடுத்துவிட்டால் நான் மந்திரி பதவியை விட்டுவிடுகிறேன்.

—மந்திரி. சுப்ரமணியம்.

போகிற பதவி இப்படியாவது போகட்டுமே என்ற அசட்டுத் துணிச்சல்! திட்டம் தரப்படும் உரிய காலத்தில். இதுவரை செய்த பாபங்களுக்கு மன்னிப்பு கேட்பீரா மக்களிடம்?

*　*　*

உசிலம்பட்டிக்கு அருகே ஒரு வெள்ளைக் காகம் கிடைத்தது.

—செய்தி.

கம்யூனிஸ்டுகள் கும்பலில் ஒரு பகுத்தறிவுவாதி கிடைத்ததுபோல்!

*　*　*

இந்தியா முழுவதற்கும் ஒரே ஆட்சி ஏற்படுத்துவது இயலாது:

—அனந்தசயனம்.

அதனாலேயே திராவிட நாட்டைப் பிரித்து விடும்படி திராவிடர்கள் கேட்கின்றனர்.

*　*　*

நாட்டில் போதிய உணவு இருக்கிறது, மக்கள் பீதிகொள்ளத் தேவையில்லை.

—உணவு மந்திரி.

எங்கோ எவரிடத்திலோ நாட்டில் இருக்கலாம்; பசித்தவன் வீட்டில் அது இல்லையே!

## கலைக்கூடம்

### எது நிஜம்?

ஒரு கிராம முன்சீப்பின் அக்ரமத்தையும், அதிகாரத்தையும் கதையின் மூலமாகக் கொண்டது பிரதிபாவின் "எது நிஜம்?" இது ஒரு மொழிமாற்றுப் படம்!

பழைய சம்பவங்களை புதுமெருகோடு கட்டுக்கோப்பாகப் படமாக்கியிருந்தாலும், சில இடங்களில் சலிப்புத் தட்டுகிறது. டைரக்ஷன் எஸ். பாலச்சந்தர், இன்னும் முயன்றிருந்தால் அந்தக்குறையை நிறைவுபடுத்திருக்கலாம்.

கோதண்டனின் மறைவிடத்தை போலீசார் கண்டுபிடித்து முற்றுகையிடும்போது—அங்கே அவன் மனைவி லட்சுமி பிரசவ வேதனையிலிருக்கும் கட்டம்—பழிக்குப் பழிவாங்கவந்த கோதண்டன தன் மனைவி பிரசவத்திற்கு அழைப்பதும் டாக்டர் உடனே புறப்படுவதும்—நல்ல அம்சம். டாக்டருடைய குணநலம் முன்னுக்குப்பின் முரணாகயிருப்பதை கதாசிரியர் ஏனோ கவனிக்கவில்லை.

தஞ்சை, டி. கே. கோவிந்தன் வசனங்களை அர்த்தபுஷ்டியுடன் நன்றாகவே அமைத்திருக்கிறார். வாயசைப்புக்கேற்ற முறையில் வசன உச்சரிப்புகள் பல இடங்களில் இல்லாவிட்டாலும் 'டப்பிங்' முறையில் ஓரளவு வெற்றி என்றே சொல்லலாம.

பாடல்களை கு. மா. பாலசுப்ரமணியமும, கு. சா. கிருஷ்ணமூர்த்தியும் இயற்றியுள்ளனர். கருத்துச்செறிவற்ற பாடல்களாயினும் இசையமைப்பில் சுமார் ரகத்தைப் பெறுகின்றன.

கதை ஆரம்பத்தில் எது நிஜம் என்ற சீர்காழி கோவிந்தராஜன் குழுவினர் பாடும பாட்டு இனிமையாகவேயிருக்கிறது.

மற்றும் ஜிக்கி, கானசரஸ்வதி, வி. ஜே. வர்மா, மாதவப்பள்ளி சத்யம ஆகியோர் பின்னணி பாடுகிறார்கள்.

"ஜோரான ஜோடி மாமா... சோறுண்ண வாங்க..." என்ற ஜிக்கி பாடும் பாட்டிற்கு ஈ. வி சரோஜாவின் நடனம் ரசிக்கத்தக்கதாக இருக்கிறது. மாடிலட்சுமி நடனம் எடுபடவில்லை.

சௌகார் ஜானகியின் நடிப்பு சிறப்பாகவேயிருக்கிறது. மற்றவர்களும் திறமையைக் காட்டியிருக்கிறார்கள். பரவாயில்லை!

முற்பகுதியில் கொஞ்சம் விறுவிறுப்புக் குன்றினாலும், பிற்பகுதி சம்பவங்கள் ஒன்றை ஒன்று பின்னிக்கொண்டு வேகமாக ஓடுகின்றது!

"எது நிஜம்?"—ஒருமுறை பார்ப்பதற்கேற்ற சுமாரான படம, என்பது நிஜம்.

—க. அண்ணாமலை.

### சிங்கள ராமன்!

மாடர்ன் தியேட்டர்சார், சிலோன் குணரத்னாவிற்காக, தெலுங்கிலிருந்து தமிழுக்கு வந்துள்ள திருட்டுராமனை சிங்களம் பேசும் ராமனாகத் தொடங்கியிருக்கிறார்கள். தோழர், தட்சிணாமூர்த்தியின் இசை டைரெக்ஷனில், இலங்கை மொகிதீன்பெக், லதா ஆகியோரைப் பாடவைத்து, சில பாடல்களும் பதிவாக்கப்பட்டுவிட்டன.

நாடகம்.

### மணிமகுடம்.

கலைஞர், மு. கருணாநிதியால் வரையப்பட்டு, புரட்சி நடிகர். எஸ். எஸ். ராசேந்திரன் குழுவினரால் நடத்தப்பட்டுவரும் "மணிமகுடம்" நாடகம், நடமாடும் தமிழ் நாடகங்களிலே நற்சிறப்புக்குரிய ஒன்று.

மாநாடுகளிலே, மாநகரங்கள் பலவற்றிலே நடத்தப்பெற்று, மக்களிடையே புத்துணர்ச்சி மலரவைத்த "மணி மகுடம" நூறுவது நாடகவிழா அண்மையில் சென்னையிலே நடைபெற்றது. அறிஞர்கள் பலர் வருகை தந்து வாழ்த்தியுள்ளார்கள். பகுத்தறிவு பூர்வமாகச் சமைத்த கலைச் செல்வமான "மணி மகுட"த்தின் வெற்றி, நமது கொள்கையின் வெற்றியாகும். அதனைச் செவ்வையாக நிறைவேற்றிய கலைஞர்களை உளமாரப் பாராட்டுகிறோம்; வாழ்த்துகிறோம்.

—இந்திரசித்தன்.

> எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
> அப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு.
> —திருவள்ளுவர்

# இதழும்

மலர் 6 | சேலம் 21—9—56 | இதழ் 11

## கடவுளைக் காப்பாற்ற.

சினிமாக்களிலே இந்து தெய்வங்கள், புராணங்களிலே இருப்பதுபோல் சரிவர சித்திரிக்கப் படுவதில்லையென்றும், அவைகள் நடந்து கொள்ளும் விதமும், பேசுகின்ற பேச்சும் அவைகளைக் கேலிசெய்வதுபோல் இருப்பதாகவும் பலர் மத்திய தணிக்கை போர்டுக்குப் புகார் செய்திருக்கிறார்களாம். பரலோக வாசிகளைப் படங்களில் காட்டும்போது, அவர்கள் அணிகின்ற ஆடைகள் ஆபாசமாகவும் இருக்கின்றனவாம்.

இது, ஆஸ்திகர்களின் பக்தியுள்ளத்தைப் பாதிக்கும் செயலென்று மத்திய தணிக்கை போர்டு கருதுகின்றதாம். எனவே, தெய்வங்களைச் சீரழிக்கும் முறையில் படப்பிடிப்புகள் இருக்கக் கூடாது என்று தயாரிப்பாளர்களுக்கு சுற்றறிக்கையொன்று விரைவில் அனுப்பப் போகிறதாம்.

மத்திய தணிக்கைபோர்டில் அங்கம் வகிப்பவர்கள் தற்குறிகளாக இருக்க முடியாது. அறிவு நல்கும் ஆங்கிலப் படிப்புதான் அவர்களுக்கு முக்கியம் என்றாலும், தமது மேலான இந்து மதத்தின் பிரசாரப் பொன்னேடுகளாம். அற்புதமான இதிகாச, புராணக் கதைகளை அவர்கள் சிறிதேனும் சுவைத்திருக்கவேண்டும். இல்லையென்றால், "தெய்வங்களைச் சீரழிக்கும் முறையில் படம் பிடிக்காதே" என்ற அறிக்கை வெளியிடுவதற்கு முன்பு, அவர்கள் தயைசெய்து ஒருமுறை இந்துமத புராணப் புத்தகங்களைப் புரட்ட வேண்டுகிறோம். காமாந்தகார, வேசிபோல, விபசாரவித்தக, கொலை களவுவல்ல, பொய்சூது தேர்ந்த, பொல்லாத பயங்கர, மிருகங்களுக்குப் பிறந்த, பறவைகளாகப் பறந்த, புழுவாக நெளிந்த, குடித்து, வெறித்து பஞ்சமா பாதகங்களையே தர்ம நெறியாகக்கொண்டு வாழ்ந்த ஆயிரம் ஆயிரம் தெய்வங்களின் அதிசயவரலாறுகளைப் பரக்கக் காணலாம், அங்கே!

மிகப்பெரிய தெய்வங்களான கோயில், குளம், விழாக்கள் என்று கொண்டாடுகின்ற சிவன், விஷ்ணு, பிரம்மா, விநாயகர், சுப்ரமணியன் போன்றாரின் ஜனப்பிறப்பும், இழிதகமைச் செயலும், கேவலமான—அருவருக்கத்தக்க—ஆபாசமான நடத்தைகளும் பார்த்தாலே போதுமே! மனிதன் மனதாலும் எண்ணமுடியாத கீழ்த்தரமான செயல்களிலே எதை விட்டார்கள்? எதை மறந்தார்கள்? பெரிய தெய்வங்களே இப்படியென்றால், குட்டித் தெய்வங்கள் அடித்த கொட்டத்தைக் கேட்க வேண்டுமா?

அவற்றை உள்ளது உள்ளபடி சினிமாவில் காட்டுவது எப்படித் தவறாகும்? எப்படி அவைகளைச் சீரழிப்பதாகும்? எந்த இதிகாசம், எந்த புராணம் இந்தக் கடவுள்களின் தோற்றத்திற்கே காரணமாக இருக்கின்றதோ, அதுவே ஆபாசக் களஞ்சியமாக இருக்கிறதென்றால், அது யார் செய்த தவறு? ஆபாச இந்துமதக் குழியிலே முளைத்தெழுந்த கடவுளரின் காம வெறிச் செயல்களை தமிழ் நாட்டுக் கோபுரங்களின் சிற்பங்கள் பச்சையாகக் காட்டுகின்றனவே! சிரிக்கின்றார்களே வெளிநாட்டினர்; பரிகசிக்கிறார்களே வேறு மதத்தவர்; சீரழியவில்லையா அந்தத் தெய்வங்கள்? சினிமாதான் சீரழிக்கின்றதா?

கேவலமான இந்தக் கடவுள்களை மேலான தெய்வங்களாக—பரிசுத்தமானவைகளாகப் படம்பிடித்துக் காட்ட வேண்டுமென்றால், தணிக்கைபோர்டு புதிய இதிகாசங்கள், புதுப் புராணங்கள் எழுத வேண்டும். இல்லையெனில் புராணப் படங்களே எடுக்க வேண்டாம் என்று படத் தயாரிப்பாளர்களைத் தடுத்துவிட வேண்டும். படத்துறை வளர்ப்பிலே தெய்வங்களைப் பெருமைப்படுத்தலை முக்கியமாகக் கருதுகின்ற மத்திய தணிக்கை போர்டார், இவற்றில் ஒன்றைச் செய்வார்களா, கடவுளைக் காப்பாற்ற?

நாடகத்திலே, சினிமாவிலே பகுத்தறிவுச் சுடரொளி பரவுவது கண்டு பதைக்கின்றனர் மதவாதிகள்; அதனை அணைத்திடத் துடிக்கின்றனர்! தணிக்கை போர்டாரிடம் புகார் செய்து, ஏற்கனவே மதவெறி என்னும் சாணைக் கல்லில் தீட்டப்பட்டுள்ள தணிக்கை கத்திரிக்கோலில் இன்னும் சிறிது கூர்மை ஏற்றுகின்றனர்; இதற்கு மதச்சார்பற்ற அரசாங்கமும் செவி சாய்க்கின்றது. எனினும், ஒளியை அணைத்திடல் ஒல்லுமோ? மடமை மதவெறி வெல்லுமோ? ●

அன்பர்கள் கவனத்திற்கு.

# வளர்ச்சியில் மகிழ்ச்சிதானே?

—:-:—

"பகுத்தறிவு" வளர்ச்சி குறித்து, நண்பர்கள் பலர் ஆதரவோடு ஆலோசனைகள் கூறுகின்றமைக்கு நன்றியுடையேன். முடிந்தவரையில் ஏற்பனவற்றை செயற்படுத்தவும் விரும்புகிறேன். சிலோன்-யாழ்ப்பாணம் தோழர் ஒருவர் எழுதுகிறார்:

2-ம் தெரு, யாழ்ப்பாணம், சிலோன்.

ஆசிரியர் அவர்கட்கு,

அன்புடையீர்!

தங்களுடைய வாரஇதழ் "பகுத்தறிவு" அளவில் சிறிதானாலும் அறிவில் சிறந்த இதழ். என்றாலும் கவரும் சக்தியில்லை. கருத்தில் அல்ல; உருவில்.

ஆசிரியரே!

தங்கள் "பகுத்தறிவு" இதழ், மதுரையில் இருந்து வெளிவரும் "கலைக் கோயில்" இதழ் அளவிலும், நல்ல அழகிய முகப்பு எழுத்துக்களுடனும் 8 அல்லது 12 பக்கங்களுடன் 2 அணா விலையுடன் வாராவாரம் வெளிவருமானால், நிச்சயம், முரசொலி, தென்றல், இதழ்களுடன் பகுத்தறிவும் ஒரு சிறந்த நிலையடையும் என்பது என் எண்ணமும் விருப்பமும்.

பகுத்தறிவு இதழின் உருவைமாற்றிய பிறகே "நந்திவர்மன்" நாடகத்தை தொடங்கவும்.

எஸ். எஸ். ராஜா.

இதுபோன்ற அன்புக்கட்டளையை வரவேற்கிறேன். இதே கருத்தோடு வேறு பல தோழர்களும் எழுதியுள்ளனர். "பகுத்தறி"வின் அளவைப் பெரிதாக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை நண்பர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். மேலும்,

28-9-56. முதல் "நந்திவர்மன்" வருவது கருதி, தற்போதையை அளவிலே மேலும் இருபக்கங்கள் கூட்டி, 10 பக்கங்களாக ஓரணா விலையிலேயே தருவது என்று முடிவு செய்துள்ளோம்.

அந்த இருபக்கங்களையும், நந்திவர்மன் நாடகத்திற்காக தனியே ஒதுக்கிவிட்டால் சேர்த்து வைத்து, முடிவில் புத்தகம்போல் தைத்துக்கொள்ள வசதியாக இருக்கும் என்று அச்சகத் தோழர்கள் கருத்துரை வழங்கினர். அஃது, தொடர் விரும்பிகளின் எண்ணத்தின் பிரதிபலிப்பாதலால் மறுப்பின்றி ஒப்புக்கொண்டேன். மகிழ்ச்சிதானே?

பகுத்தறிவு வளருகின்றது. தோழர்களின் அன்பும், ஆதரவும் மேலும் பெருகவிழையும்.

ப. கண்ணன்,
ஆசிரியர்.

தலைமை நிலையச் செய்தி:

## தேர்தல் ஆய்வுக்குழுச் சுற்றுப்பயணம்.

பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் தேர்தல் ஆய்வுக்குழு உறுப்பினர்களான தோழர்கள், ஈ வே கி. சம்பத்து, ஏ. வி. பி. ஆசைத்தம்பி, என்.வி. நடராசன், கே.ஏ. மதியழகன், ஆகியோரும், அக்டோபர் திங்கள் 1-ம் நாளிலிருந்து 23-ம் நாள்வரை தமிழகத்தின் குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்று தங்கியிருந்து அந்த இடங்களைச் சுற்றியுள்ள தொகுதிகளைச் சார்ந்த கழகத் தோழர்களையும் கழக ஆதரவாளர்களையும் சந்தித்துப் பொதுத்தேர்தல் சூழ்நிலை குறித்து விவரம் அறிவார்கள். தேர்தல் சூழ்நிலை குறித்து விவரம் தெரிவிக்தக் கூடிய அந்தந்த தொகுதியிலுள்ள கிளைக் கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் அன்புகூர்ந்து அந்தந்த மாவட்டச் செயலாளர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

'அறிவகம்' சென்னை, 19-9-56. தலைமைக் கழகம் (தி. மு. க.)

## பகுத்தறிவு.

(வாரஇதழ்)

கையொப்பத்தொகை:

ஆண்டு 1-க்கு 3-8-0
ஆறு மாதங்கள் 2-0-0
தனிப்படி 0-1-0

விற்பனையாளர் இல்லாத இடங்களுக்கு, முன்பணம் கட்டும் விற்பனையாளர் தேவை.

பகுத்தறிவு அலுவலகம்,
சேலம்-1.

## சேலம் அம்மாப்பேட்டை தி.மு.க. 6-ம் ஆண்டுவிழா.

நிகழ்ச்சி நிரல்.

30—9—56 ஞாயிற்றுக்கிழமை காலை 8-மணிக்கு ஊர்வலம். கொடியேற்று விழா.

காலை 10 மணிக்கு, பீர்ன எல்லப்ப செட்டித் தெரு அழகிரி பந்தலில்,

ஆண்டுவிழா.

தலைவர்: கே. பி. நஞ்சப்பன்.
பேச்சாளர்: கி. மனோகரன், ப. உ. சண்முகம், E. R. கிருஷ்ணன், சிற்றுளி-சுப்ரமணியம்.

மாலை 6 மணிக்கு, பீர்ன எல்லப்ப செட்டித் தெருவில்,

பொதுக்கூட்டம்.

தலைவர்: C. A. சித்தையன்,
பேச்சாளர்: கி. மனோகரன், ப. உ. சண்முகம், E. R. கிருஷ்ணன், சிற்றுளி—சுப்ரமணியம்.

K. S. மணி,
செயலாளர்.

மல்லசமுத்திரம், தி. மு. க. திராவிடநாடு விடுதலைநாள் கொண்டாட்டம்.

23—9—56-ந் தேதி இரவு திறந்தவெளி அரங்கில்,

## அரக்கு மாளிகை

நாடகம் நடைபெறும்.

எம். ஆர். ஆறுமுகம்,
செயலாளர்.

# கேள்விக்கணை

இக்கிழமை பரிசு பெற்றவர்:
● பொ. ப. ஆறுமுகம்,
பெள்ளாதி,
கோவை மாவட்டம்.

சி. வாசுதேவன், திருச்சிராப்பள்ளி.

கே: 'தி மு க.' என்ற மூன்றெழுத்தை எண்ணி, மூன்றெழுத்து 'சினிமா'வை ஒழிப்பதாக தி. க. வினர் பேசுவதற்கு 'பொறுமை' என்ற மூன்றெழுத்தே காரணம் என்பது தவறு?

ப: அத்தோடு "ஏலாமை" என்ற மற்றொரு மூன்றெழுத்தைச் சேர்த்தாலுங்கூட தவறாகாது, தோழரே!

*   *   *

கே: திருச்சியில் பேசிய தி. க. பொதுச்செயலாளர், நாங்கள் காங்கிரசில் சேருவோம் என்கிறாரே: சேர்ந்து என்ன செய்வார்கள்?

ப: கரடியைக் கரடி தழுவு தலேமுறை. மனிதன் தழுவிக் கொண்டால், அப்புறம் அவன் செய்வதற்கு அங்கு என்ன இருக்கும்? எல்லாம் அதன் செயல்!

கே. ஆர். வெங்கடராமன், சிறுதையூர்.

கே: தமிழ் இனம் இத்தகையது என்பதை விளக்க ஏதேனும் ஆதாரம் இருக்கிறதா?

ப: ஒன்றல்ல; இரண்டல்ல; நூற்றுக்கணக்கான வரலாற்று, பூகோள, விஞ்ஞான, இலக்கிய ஆதாரங்கள் நூல்வடிவிலும், பொருள் வடிவிலும் கலாசாலைகளிலே — காட்சிக் கூடங்களிலே உள்ளன.

*   *   *

கே: ஒரு பத்திரிகை ஆசிரியர்மீது மற்ற பத்திரிகை ஆசிரியர் ஏன் அவதூறாக எழுதுகிறார்?

ப: அவதூறாக, அக்கிரமமாக, ஆபாசமாக எழுதுவதிலே; பாவம், அவர் வாழுகிறார்!

மா. திராவிடமணி, திருவண்ணாமலை.

கே: வாடைக்காற்று வீசினால் வீட்டுக் கதவை சாத்தச் சொல்லுகிறார்களே; ஏன்?

ப: இந்திபோல், வாடைக் காற்று வடக்கிலிருந்து வருவது, இந்தி தமிழ்வளத்தைக் கெடுப்பதுபோல், அது நமது உடல் நடத்தைக் கெடுப்பது!

முரசுமணி, திருவண்ணாமலை

கே: கற்பை காசுக்கு விற்பனைசெய்யும் பாவைக்கும், பிறந்த நாட்டின் பெயரை விரும்பாத காமராசருக்கும் என்ன வித்தியாசம்?

ப: அவள் பெண்; அவர் ஆண்.

க. இராதாகிருஷ்ணன், மூலக்காடு.

கே: வகுப்புபேதமற்றது என்று சொல்லப்படும் காங்கிரசின் ஆட்சியிலே, இன்சூரன்ஸ் கார்ப்பரேஷனில் நியமிக்கப்பட்டவர்கள் அனைவரும் ஆரியர்களாகவே இருப்பது ஏன்?

ப: எல்லோரும் ஆரியர்களாகவே இருந்தும், அவர்களையே நியமித்ததுதான் வகுப்பு பேத மற்ற தன்மை என்பார்களே, பாரதமாதாவின் புத்திர சிகாமணிகள்.

இரா. வசந்தகோபால், சேலம்.

கே: தமிழரசுக்கழகம் தேர்தலில் ஈடுபடுமா?

ப: இது அவர்களுக்கே புரியாத விஷயமாயிற்றே!

*   *   *

கே; கதை, வசனம் எழுதுவது தொழிலா? பிரசாரமா?

ப: இரண்டும் கலந்தது.

● பொ. ப. ஆறுமுகம், பெள்ளாதி.

கே: வணிக குலத்தில் பிறந்த கண்ணகி, கணிகையர் குலத்தில் பிறந்த மாதவி; இவர்களில் கற்புத் தெய்வம் யார்?

ப: இருவரும் இருவகையில் சிறந்த தமிழச்சிகள்; ஆனால், இருவருமே தெய்வமல்ல! வரம் அருளவும் மாட்டார்கள்.

## வருகிறது நவராத்திரி!

விரதங்களில் ஒன்று. இது புரட்டாசிமாசம் பூர்வபக்ஷப் பிரதமை முதல் திரிதை வரையில் உருத்திரியையும், சதுர்த்தி முதல் ஷஷ்டி வரையில் இலக்குமியையும், சப்தமி முதல் நவமி வரையில் சரஸ்வதியையும், பூசித்துத் தசமியில் முடிப்பது. இதனைச் சுகேது என்னும் அரசன, அரசாட்சியிழந்து வருந்தியதால் அவன் மனைவியாகிய துவேதியை ஆங்கிரச முனிவர் இவ்விரதம் அநுட்டிக்கக் கற்பித்தனர். அவ்வகை அவள் அநுட்டிக்க அவ்வநுட்டானத்திற்குப் பின் அவள் வயிற்றிற் பிறந்த குமரனாகிய சூரியப்பிரதாபன் இழந்த நாட்டைப் பகைவரிடமிருந்து மீட்டனன் என்பர்.

—அபிதானசிந்தாமணி.

மேலும் இந்த விரதத்தை அனுஷ்டிப்பவர்கள், இரண்டு வயது முதல் பத்து வயதுவரையுமுள்ள கன்னிகைகளுக்குப் பூசை புரியவேண்டும். வேதம உணர்ந்த வேதியர்கள், ஒன்பதுபேர், அல்லது ஐந்துபேர், மூன்று பேரை அழைத்து ஆசனத்தில் வைத்துப் பூசிக்க வேண்டும். என்பதாக இன்னும் பலப் பலபுரிய—சாஸ்திரம் இருக்கிறது—சம்பிரதாயம் இருக்கிறது. அப்படியெல்லாம் செய்து இந்த நவராத்திரி விரதம் கொண்டாடினவர்களுக்கு எல்லா பாக்கியங்களும், செல்வங்களும் தானாக வந்தடையுமாம். உயர்பதவி கிடைக்குமாம். இழந்த நாடும், இறந்த பதவியும் கிட்டுகிறதாம்.

நவராத்திரி விழா கொண்டாடும் நல்லவர்களே! இவற்றையெல்லாம் நம்புகிறீர்களா? நம்பி இந்நாள்வரை கொண்டாடியதால் பலன் கண்டதுண்டா?

அறிவுடைமை பிறப்பினால் ஏற்படுவதல்ல; ஒவ்வொருவனும் தானே அதைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டும். —ஞானி.

[2-ம் பக்கம் தொடர்ச்சி]

இருபதாம் நூற்றாண்டிலேதான் இருக்கிறார்களா என்ற வினவும் பண்புடையோர் வாயிலிருந்து, அவரது அறிவிலே ஏதேனும் கலாம் நிகழ்ந்திருந்தாலொழிய—கண்டிப்பாக வெளிவர மாட்டா, அவரது உடலுக்கு ஊறு ஒன்றும் நேராமல் அவரை ஊர்திரும்ப விட்டோமே, அதுவே நமது பண்பாட்டைக் காட்ட வில்லையா? நாம் இருபதாம் நூற்றாண்டில் இடைப் பகுதியிலே முன்னேற்றக் கழகம் என்பதற்கேற்ப முன்னோடிகளாகத்தான் வாழ்கிறோம்—என்பதற்கு இதைவிட வேறென்ன சான்று?

“சொல்லைச் சிந்துமுன் இருமுறை சிந்தி” என்று ஆங்கிலத்திலே ஒரு பழமொழியுண்டு. ‘ஆரியசமாஜம்’ என்ற பெயராலே இந்த நாட்டிலே ஒன்று நிலவி வருகிறது. எல்லோரும் கலந்துவிட்ட நாட்டிலே எப்படி வந்தனர் ஆரியர்? எவ்வாறு முளைத்தது ஆரிய சமாஜம்? அதுதான் போகட்டும்—“அகில உலக ஒற்றுமை முகிழ்த்துவரும் நாள் இந்த நாள்; அனைத்துலகும் இணைந்து “ஓரரசு அமைக்க வேண்டிய பொன்னாள் நம்மை நெருங்கிவரும்வேளை இது” என்றார். தமிழ்கற்ற என் நெஞ்சம் உண்மையிலேயேபூரித்தது. பேய்ச்சலிலிருந்து மீளும் கறவையை எதிர்நோக்கும் கன்றைப்போல தமிழர் அந்த நாளை எதிர்நோக்குவர், அத்தகைய தமிழருக்கு அறிவுரை புகல வரும் நாராயணருக்கு இந்துமகா சபை என்று இந்த நாட்டிலே ஒன்று இருப்பது தெரியுமா? அடுக்குமா இது? அத்தகைய ஒரு அமைப்பு நாட்டில், அதுவும் சமயச்சார்பற்ற நாட்டிலா? ஒற்றுமையைக் குலைப்பதன்றோ? இந்த இரண்டுமே நாராயணர் வாழும் வடநாட்டிலே தோன்றி அங்கேயே வாழ்ந்து வருபவைதான்.

அங்கிருந்து சென்னைக்கு ஓடிவந்து ‘ஓ அஞ்ஞானிகளே’ என்னும் இந்த ஞானகுரு, தம்மூரில், தம் திருவாயைத் திறந்திருந்தால் என்ன நேரிட்டிருக்கும்? இந்து மகாசபையினரைப் பார்த்து, ‘மக்கள் ஒற்றுமைக்கு ஊறு விளையும்—வேற்றுமையை வளர்க்கும்’ என்று ஒரு வார்த்தை கெஞ்சுதலாக, அல்லது கொஞ்சுதலாகவோ கூற இவரால் ஆகுமா? ஆகலாம், இவர் சாகத் துணிந்தால்!

1921-ம், ஆண்டிலே எடுக்கப்பட்டது ஒரு மக்கள்தொகைக்கணக்கு. சென்னை மாநிலத்தில் அப்பொழுது நூற்றுக்கு தொண்ணூற்று நாலுபேர் சூத்திரர் என்று குறிக்கப்பட்டுள்ளது! 100-க்கு 94 பேர் சூத்திரர்! உயிரோடுதானே இருந்தார் இந்த நாராயணர்? புள்ளிக் கணக்கை வெள்ளைக்காரனா எடுத்தான்? எடுக்கப்பட்டதென்னமோ வெள்ளைக்காரன் ஆட்சிக்காலத்திலே. ஆனால், அன்று அவ்வேலையிலே அமர்ந்திருந்தோரெல்லாம் அவாள்தானே! அந்தச் சூத்திரரைப் பார்த்துத்தான் இப்பொழுது கேட்கிறார்—இவர்களெல்லாம் இருபதாம் நூற்றாண்டில்தான் வாழ்கிறார்களா என்று! விடுதலை கிட்டிய மறு ஆண்டிலேயே இவர்கள் பூண்டோடு அழிந்திருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தார் போலும்!

இந்த நாட்டிலே ஆரிய சமாஜம் வாழலாம்—இந்து மகாசபை செல்வாக்குப் பெறலாம்—மதச்சார்பற்ற நாடென்று சட்டத்தில் தீட்டிவிட்டு மதத்தின் பெயரையே நாட்டிற்குச் சூடலாம்—இவை அனைத்தும் ஒற்றுமை கூட்டுபவை! உலகமொழியான ஆங்கிலத்தை அழித்துவிட வேண்டும். உலக ஒற்றுமையை நோக்கித்தான் அதுவும் செய்யப்படுகிறது. நிறைய மக்கள் பேசுகிறார்கள் என்ற ஒரே காரணத்திற்காக யாவரும் இந்தி கற்க வேண்டும்; அதிலேதான் அகில இந்தியாவே அடங்கிக் கிடக்கிறது. பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்ற பாகுபாடு பைத்தியக்காரத்தனம். ஆனால், வேறுபாடு கற்பிக்கும் புராண இதிகாசங்கள்தான் நம் இந்தியப் பண்பாட்டின் காவலர்கள். அவை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும். அதுதான் போகிறது. அரசாங்கப் பதிவுகளிலேயே அந்த வேறுபாடு இன்னும் வாழ்கின்றதுவே; அது ஏன்?

நாடார், பிள்ளை, முதலி, செட்டி, கிராமணி, கவுண்டன், உடையார், நாய்க்கர், தேவர், ஐயர், ஐயங்கார், ஆச்சாரி, சாஸ்திரி அப்பப்பா; எத்தனை வாலுகள்! அகில உலக ஒருமைப்பாட்டிற்கு வேண்டியவைதானா? உமது பெயரிலேயே நாராயணன் ஒட்டிக் கொண்டிருக்கிறானே, அது சைவாளுக்குச் சங்கடந்தாராதோ?

ஆனால், நம்மைப் பார்த்துச் சிரிக்கிறார் நாராயணர்!

உலகம் சுழலவில்லை, ஐயனே! நீர்தான் சுழலும் ராட்டினத்திலே உட்கார்ந்திருக்கிறீர்!

உலகம் புகை மண்டிலமில்லை—நுமது கண்களிலேதான் புகை மண்டிக் கிடக்கிறது.

தமிழகம் பித்தர் கூடாரமல்ல—தமிழகத்திற்கு வருவோருக்குத்தான் ஏனோ இந்த வெய்யில் ஒத்துக்கொள்வதில்லை.

அன்பு வழியை,வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் கடைப்பிடிக்கும் வழிகளைப்பிழிந்துதரும் குறள் எங்கள் மறை. அதன்வழி நின்று பேசப்படும் பகுத்தறிவு, வன்கண்மை படைத்ததாகக் காணப்படுமேல் உமக்காக நாங்கள் கட்டாயம் இரக்கப்பட வேண்டும்!

●

ஆசிரியர், ப. கண்ணன் வரையும்,
பல்லவ மன்னன் பைந்தமிழ் நந்தியின்,
வல்லமை செப்பிடும் வாழ்க்கை நாடகம்.

நந்திவர்மன்

★ ★ ★

அடுத்த இதழில்

தொடங்குகிறது; சுவையுங்கள். விற்பனையாளரிடம்
சொல்லிவிடுங்கள் பிரதிக்கு, இப்போதே.

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

சின் ஓரவஞ்சனையையும், கனம் காமராசர் ஆட்சியின் அலட்சிய புத்தியையும் தெளிவாகவும், திட்டவட்டமாகவும் தெரிந்துகொள்ள வேண்டுகிறேன்.

அன்பன்,
ஈ. வே. கி. சம்பத்.

## "தொழில் துறையில் தென்னிந்தியா பின் தங்கிக் கிடக்கிறது"

## "சேலத்தில் அலுமினியத் தொழிற்சாலை நிறுவக் கடனும் தொழில் துறை உதவியும் தருகிறோம்"

புதுடில்லி, ஜன. 20—தென்னிந்தியாவில் ஒரு அலுமினியம் தொழிற்சாலையை நிறுவவும், ஒரு நீர் மின்சார உற்பத்தித் திட்டத்தை நிர்மாணிக்கவும் உதவிதர இரஷ்யர்கள் அறிவித்திருப்பதாகத் தெரிய வருகிறது.

யூனியன் அரசாங்கத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ள இரஷ்ய உதவி, பெரும்பாலும் ஏற்றுக் கொள்ளப்படும் என அறிவிக்கப்படுகிறது.

சேலம் அருகில் அலுமினியம் தொழிற்சாலையை நிர்மாணிப்பதே ஏற்பாடு; அங்குதான் 100 இலட்சம் டன் உயர்தரமான பாக்சைட் கிடைக்குமெனச் சொல்லப்படுகிறது.

ஆந்திரரவில் உள்ள மச்குண்ட் மின்சாரத் திட்டத்தின் ஒரு பகுதியாகவே நீர் மின்சார உற்பத்தி ஏற்பாடு இருக்கக் கூடும். இத்துறையில் இரஷ்ய மூதலீடு 10 கோடி ரூபாயாகும்.

இவ்விரு திட்டங்களையும் உடனடியாக நிறைவேற்றுவதற்காக, நீண்டநாள் தவணைக் கடனாகப் பணமும் தொழில் துறை உதவியும் தர, சோவியத் அரசாங்கம் அறிவித்திருப்பதாகத் தெரியவருகிறது.

எங்கு உதவி அதிகமாகத் தேவைப்படுகிறதோ, அங்கு உதவி செய்வது என்ற சோவியத் குறிக்கோளின் உள்ளடக்கமாகும் இவ்வுதவி என சொல்லப்படுகிறது.

தொழில் துறையில் தென்பகுதி பின்தங்கிக் கிடப்பதாகவும், அதன் பலனாகத் தங்கள் உதவியில் தென் பகுதிக்கே உயர்ந்த முதலிடம் தரப்பட வேண்டும் எனவும் இரஷ்யர்கள் உணர்ந்திருப்பதாகத் தெரியவருகிறது.

'மெயில்' 21—1—56

இந்தச் செய்தியின்மேல் தோழர், சம்பத்து அவர்கள் நூற்றுக்கணக்கான பொதுக் கூட்டங்களிலே தமது கருத்தினைச் சொல்லியுள்ளார். இந்தியப் பேரரசின் ஓரவஞ்சனையையும், கையாலாகாத சென்னை அரசினர் போக்கினையும் பகிரங்கமாக—மக்கள் ஆரவாரிக்கும்வண்ணம் கண்டித்திருக்கின்றார். கூட்டத்திற்கு

### ஐயோ, போச்சே!


ஒரு காலத்தில் காங்கிரஸ்காரர் என்றால் நம்பலாம்; பொய்சொல்ல மாட்டார்; திருடமாட்டார்; யோக்கியர் என்று எந்த ஊரிலும், எந்தக் கூட்டத்திலும் நம்பிக்கையிருந்தது.

—"கல்கி" 16-9-56.

முன்னால், கழகத் தோழர்கள் போட்டுக் கொடுத்த ஆசனத்திலே அமர்ந்துகொண்டு, கண் கொட்டாமல் பேச்சைக் குறிப்பெடுக்கும், சி. ஐ. டி. அரசாங்க ஒற்றர்களின் அறிக்கையை அரசினர் பார்த்திருக்க வேண்டுமே! தோழர், சம்பத்து அவர்கள் பேசிவருவது பொய்யென்றும், புரளியென்றும், இதுவரை அமைச்சர்களோ அரசாங்க அலுவலரோ, காங்கிரஸ் கட்சியினரோ, அவர்தம் ஏடுகளோ மறுத்ததுண்டா? அவரது இந்த அறிக்கையையேனும் மறுக்க முன்வருவார்களா? ஆண்மையிருக்குமா? பொறுத்துப் பார்ப்போம்,

—வாலி.


வெண்சங்கு சீயக்காய் தூள் எங்கும் கிடைக்கும்.



எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம் ராணி
&
சேகர் ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்:

வெண்சங்கு சீயக்காய்த்தூள் தொழிற்சாலை,
3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.


சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர் ப. கண்ணனால் அச்சிடப்பட்டு;
சேலம்-1 குமாரசாமிப்பட்டியினின்றும் வெளியிடப்படுகிறது.